ஆணையர்

07 JUL 2022

சென்னை-600 035.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் - கருணை அடிப்படையில் பணிநியமனம் - திருமதி.ஜெ.அமலா ரூத்மேரி பதிவுரு எழுத்தர் பணியிடையில் மரணம் - அவரது வாரிசான செல்விரயுவேதா என்பவருக்கு 13.11.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை 008637

அரசாணை (நிலை) எண்.209

நாள்: 05. 07.2022,
சுபகிருது, ஆனி - 21
திருவள்ளுவர் ஆண்டு - 2053

**படிக்கப்பட்டது:**

1. தனியரின் விண்ணப்ப நாள்.09.06.2015.
2. அரசு தகவல் தொகுப்பு விவர மைய ஆணையரின் (மு.கூ.பொ) கடித ந.க.எண்.3075/அ1/2018, நாள்.09.07.2018, 29.03.2019 மற்றும் 28.10.2019.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (எம்) த்துறை, நாள்.01.08.2018.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.-1)த் துறை, நாள்.23.01.2020.
5. அரசாணை (நிலை) எண்.373, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள்.16.10.2020.
6. அரசு தகவல் தொகுப்பு விவர மைய ஆணையரின்(மு.கூ.பொ) செயல் முறை ஆணை எண்.3075/அ/2020, நாள்.10.11.2020.
7. அரசு தகவல் தொகுப்பு விவர மைய ஆணையரின் (மு.கூ.பொ) கடித ந.க.எண்.7722/அ/2021, நாள்.07.12.2021.

.....

ஆணை:-

மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசு தகவல் தொகுப்பு விவர மைய ஆணையர், அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில் பதிவுரு எழுத்தராக பணியாற்றி வந்த திருமதி.ஜெ.அமலா ரூத்மேரி அவர்கள் உடல்நலக்குறைவால் பணியில் இருக்கும்பொழுது 29.01.2013 அன்று மரணமடைந்தார். இவரின் வாரிசான செல்விரயுவேதா, என்பவருக்கு மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின் வழி, அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 13.11.2020 முற்பகல் முதல்

பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார் என்றும், எனவே, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 13.11.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. செல்வி.ர.யுவேதா 08.12.1999 அன்று பிறந்துள்ளார். தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான 10-ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார். மேலும், தனியர் பணிக்கோரும் நாளில் 18 வயது பூர்த்தி செய்யாததால் மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தனியர் பொருட்டு பார்வை 4ல் காணும் அரசாணைக்கு விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b)-க்கு தளர்வளித்தும் தனியருக்கு பணிநியமனம் வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், அரசு தகவல் தொகுப்பு விவர மைய ஆணையரின் (மு.கூ.பொ) கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் செல்வி.ர.யுவேதா என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 13.11.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்வதால் தனியர், ஊதிய உயர்வு மற்றும் நிலுவைப் பணப்பயன்களை பெற விதிகளின்படி தகுதியுடையவர் ஆகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.கு.எண்.3530/க்யூ-1/2022 நாள்:25.02.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.கு.எண்.7198 / ஜி3 / 2022, நாள்:03.03.2022 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா.முருகானந்தம்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர் :
ஆணையர் (மு.கூ.பொ), அரசு தகவல் தொகுப்பு விவர மையம், சென்னை-35.
(அனைத்து அசல் சான்றிதழ்களுடன்)
செல்வி.ர.யுவேதா, இளநிலை உதவியாளர்,
அரசு தகவல் தொகுப்பு விவர மையம், சென்னை-35.
(ஆணையர் (மு.கூ.பொ) வழியாக)

நகல் :
தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-09
மனிதவள மற்றும் மேலாண்மைத் துறை, சென்னை-09.
இருப்புக்கோப்பு/உதிரிநகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

மெகு.எண் 0772/அ/2022, நாள் 13.07.2022

**பிரிவு அலுவலர்**